1990 சனவரி 20]

லாளர்களுடைய, சுருட்டுத் தொழிலாளர்களுடைய நலனைப் பாதுகாக்கின்ற அளவில், 1966 ஆம் ஆண்டு ஏற்படுத்தப்பட்ட அந்த சட்டத்தில் இருக்கின்ற ஒட்டை உடைசல்களை நீக்கி இந்தத் தொழிலாளர்களைப் பாதுகாப்பதற்கு இந்த அரசு முயலுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் தெரிவித்த கருத்தின் அடிப்படையில் உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வினாக்கள் 1148, 1743, 5046, 5369 மற்றும் 5648 ஒரே பொருள் தொடர்புடையவைகயாக இருப்பதால் ஒன்றாகச் சேர்த்து எடுத்துக் கொள்ளப்படுகின்றன.

கால்நடை மருத்துவக் கல்லூரிகள்.

*1148. திரு. ஜி. ஜி. குருமூர்த்தி:

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா;

(அ) பெரியார் மாவட்டத்தில், கால்நடை மருத்துவக் கல்லூரி அமைக்கும் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு டாக்டர் க. சந்திரசேகரன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை

(ஆ) வினா எழாது.

*1743. திரு. க. வெ. வீ. இராசமாணிக்கம்,

பேராசிரியர் க. பொன்னுசாமி:

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர் கீழ்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா;

(அ) மதுரையில் கால்நடை மருத்துவக் கல்லூரி துவக்க அரசிடம் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு டாக்டர் க. சந்திரசேகரன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை

(ஆ) வினா எழாது.

*5046. திரு. சு. குருநாதன் :

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டம், பாளையங் கோட்டையில் கால்நடை .மருத்துவக் கல்லூரி அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு டாக்டர் க. சந்திரசேகரன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

இல்லை.

*5369. திரு. எஸ். டேனியல்ராஜ் :

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா ;

(அ) தூத்துக்குடியில் கால்நடை மருத்துவக் கல்லூரி அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு டாக்டர் க. சந்திரசேகரன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை

(ஆ) வினா எழாது.

*5648. திரு. பி. மாரப்பன் :

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா ;

(அ) காங்கேயம் தொகுதியில், கால்நடை மருத்துவக் கல்லூரி அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?